# கதம்பம்


## ஜூன் 2021



# இந்த இதழில்....


- அறிவிப்பு மடல்
- குறளும் பொருளும்
- திரையும் இசையும்
- ஜேம்ஸ் நதிக்கரையினிலே...(ஒரு தொடர்)
- சமையல் குறிப்பு
- கவிதைக்குவியல்
- திரைப்பட விமர்சனம்
- தமிழ்ப்பள்ளி மாணவர்கள்
- உடல்நலக் குறிப்பு
- தாயுமானவர் (சிறுகதை)
- வாசகர் கருத்து படிவம்

# அறிவிப்பு மடல்



**ஜூலை**:  குழந்தைகளுக்கான விளையாட்டு/டென்னிஸ் கேம்ப் (Summer sports/tennis camp for kids 6 and older).  இதில் பங்கு பெற விரும்பும் குழந்தைகளுக்கு ஆறு வயது முடிந்திருக்க வேண்டும்.

**தேதி  - ஜூலை 11 முதல் 17 வரை**
**நேரம் - மாலை 7 முதல் 8 மணி வரை**
**இடம் - க்லென் ஆலென் உயர் நிலை பள்ளி**
**சந்தா - தமிழ்ச்சங்க உறுப்பினர்களுக்கு - $ 5**
**மற்றவர்களுக்கு - $ 10**

மேலும் விவரங்கள் படிவத்துடன் மின்னஞ்சலில் உறுப்பினர்களுக்கு அனுப்பப்படும்.

**ஆகஸ்டு:**  CDC யின் கோவிட் வழிகாட்டுதல்கள் அனுமதித்தால் இரிச்மண்டு தமிழ்ச் சங்கத்தின் வருடாந்திர Volleyball tournament நடத்த திட்டமிட்டிருக்கிறோம். விளையாடும் தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

**செப்டம்பர்:** CDC யின் கோவிட் வழிகாட்டுதல்கள் அனுமதித்தால் இரிச்மண்டு தமிழ்ச் சங்கத்தின் வருடாந்திர Throwball tournament நடத்த திட்டமிட்டிருக்கிறோம். விளையாடும் தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

All submissions for ***Kadambam*** should be emailed to newsletter.rts@richmondtamilsangam.org by the 15th of each month.

# குறளும் பொருளும்! (திருக்குறள்)

**குழலையும் யாழையும் விட இனிதானது**
தம் மக்களின் மழலை மொழி கேளாத செவிகளே குழல், யாழ் இசையெல்லாம் இனிது என்று சொல்லும் என்கிறார் ஐயன்.

நம் தமிழ்ப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் திருக்குறள் உரை தங்கள் மொழியில் எழுதியிருக்கிறார்கள். இதைக் காட்டிலும் இனிய குழலிசை/யாழிசை நமக்கு என்ன இருந்து விடப்போகிறது?

[நாம் பெரியவர்கள் எழுதும் சில குழலிசைகள் குழந்தைகள் வாசிக்கும் பிரஞ்சு ஆர்ன் (French Horn) கருவியில் கேட்பது போல் இருக்கிறது என்போரும் உளர் என்று கேள்வி. :) ]

நம் மாணவர்களை குறள் படிக்கவும், புரிந்து கொள்ளவும், புரிந்ததை அவர்கள் சொற்களில் எழுதவும், பயன்படுத்தவும் ஊக்கப்படுத்துகிறோம்.
எனவே, இம் மழலைச் சொல் கேட்டுக் கொண்டிருக்கும் வரை நம் பிரஞ்சு ஆர்னை பெட்டியிலிட்டு பத்திரப்படுத்தி வைக்கிறேன்.

**குறிப்பு:**
குறள் தேர்வும், அதன் உரையும் முழுக்க முழுக்க மாணவர்கள் தாங்களாகவே செய்துகொண்டது. ஊக்கப்படுத்தியதும் பிழைதிருத்தியதும் மட்டுமே பெற்றோர், ஆசிரியர் பங்கு.

இரு மாணவர்களுமே ஒப்புரவு அறிதல் [பொது நலன்/Duty to Society] அதிகாரத்தில் இருந்து குறள் தேர்வு செய்திருக்கிறார்கள்.

வாழ்க நம் மக்கள் (நம் மாணவர்கள்); வளர்க தமிழ்.

இந்த உலகத்தில் வாழும் நாம் அனைவரும் நம் நண்பருக்கோ, உறவினர்களுக்கோ அல்லது இந்த சமுதாயத்தில் உள்ளவர்களுக்கோ ஏன் உதவி செய்கிறோம்? இன்று உதவினால் நாளை நமக்கு உதவுவார்கள் என்றுதானே செய்கிறோம்.

இது உண்மைதானே!

ஒரு கோயிலுக்கோ அல்லது சமுதாயத்தில் உள்ள ஒரு அமைப்பிற்கோ உதவும்போது நமது பெயரை அந்த பொருளிலோ அல்லது விளம்பரத்தட்டிலோ பதித்து நம்மை நாமே விளம்பரப்படுத்துகிறோம். இவ்வாறு எதிர்பார்த்து அவர்களுக்கு உதவுவது சரியா? அல்லது தவறா? என்ற குழப்பம் நம் எல்லோரிடமும் இன்று வரை இருந்து கொண்டு தான் இருக்கிறது.

இதனை திருவள்ளுவர் ''உதவி செய் ஆனால் கைம்மாறு (பதில் உதவி) எதிர்பார்க்காதே" என்பதை "ஒப்புரவறிதல்" என்னும் அதிகாரத்தில் முதல் குறளில் தெளிவாக விளக்குகிறார்.

இந்த குறளில், மழை தருகின்ற மேகமானது இந்த உலகத்தில் வாழும் உயிர்களின் இனத்தையோ அல்லது மதத்தையோ பார்க்காமல் மற்றும் நம்மிடம் இருந்து எதையும் எதிர்பார்க்காமல் மழையை பொழிந்து நமக்கு உதவுகின்றது.

# குறளும் பொருளும்! (திருக்குறள்)

இதனை திருவள்ளுவர் "உதவி செய் ஆனால் கைம்மாறு (பதில் உதவி) எதிர்பார்க்காதே" என்பதை "ஒப்புரவறிதல்" என்னும் அதிகாரத்தில் முதல் குறளில் தெளிவாக விளக்குகிறார்.

இந்த குறளில், மழை தருகின்ற மேகமானது இந்த உலகத்தில் வாழும் உயிர்களின் இனத்தையோ அல்லது மதத்தையோ பார்க்காமல் மற்றும் நம்மிடம் இருந்து எதையும் எதிர்பார்க்காமல் மழையை பொழிந்து  நமக்கு உதவுகின்றது.

அதைப்போல நாமும் எந்த ஒரு கைம்மாறும் எதிர்பார்க்காமல், இந்த உலகத்தில் உள்ளவர்களுக்கு தேவைப்படும் நேரத்தில் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் உதவி செய்ய வேண்டும் .

**கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு**
**என்ஆற்றுங் கொல்லோ உலகு**

கைம்மாறு  வேண்டா: எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல்
கடப்பாடு: நம் கடமை
மாரிமாட்டு: மழையை தருகின்ற மேகம்

அதனால் நாமும் நம்மால் முடிந்த வரை அடுத்தவர்களுக்கு உதவுவோம்.

**எழுதியது - நவின் மனோஜ் (தமிழ்ப்பள்ளி நிலை 5 மாணவர்)**

தன்னலம் இருக்கும் ஒருவரிடம் பொருள் சேர்ந்தால், அதனால் யாருக்கு பயன்? அதை அவரும் சரியாக பயன்படுத்த மாட்டார், பிறர்க்கும் கொடுக்க மாட்டார். அதனால் அந்த பொருள் யாருக்கும் பயன்படாது. ஆனால், பொதுநலம் கொண்டவரிடம் இருக்கும் செல்வம் எல்லோருக்கும் பயன்படும். இதைத்தான் திருவள்ளுவர் இந்த குறள் மூலம் நமக்கு சொல்கிறார். ஊருக்கு நடுவில் நன்றாக செழித்து வளர்ந்த மரத்தில் இருக்கும் பழங்கள் எல்லோருக்கும் பயன்படும். அந்த பழங்கள் யாருக்கு தேவையோ அவர்கள் பறித்து சாப்பிடலாம். அது போல் தான் பொதுநலம் கொண்ட ஒருவரிடம் உள்ள செல்வம் எல்லோருக்கும் பயன்படும்.

**பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**
**நயனுடை யான்கண் படின்**


பயன் மரம் - பயன்படுகின்ற மரம்
பழுத்தற்றால் - கனிந்தது போல
நயன் உடையான் - ஒப்புரவு உடையவன் (பொது நல மனம் கொண்டவரிடம்)
கண் - இடத்தில்
படின் - இருக்குமேயானால்.

**எழுதியது - ஹாசினி சீனிவாசன் (தமிழ்ப்பள்ளி நிலை 5 மாணவர்)**

# திரையும் இசையும் - ஹம்ஸத்வனி

**29**ஆம் மேளகர்த்தா ராகம் ஆகிய சங்கராபரணம் வம்சத்தில் வரும் ராகம்.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துஸ்வாமி தீக்ஷிதரின் தந்தையாரால் உருவாக்கப்பட்ட ராகம். கர்நாடக இசையில் இருந்து இறக்குமதி செய்து ஹிந்துஸ்தானி இசையிலும் பிரபலமாக இடம் பெற்று வரும் ராகம் இது.




இசை கச்சேரிகளின் தொடக்கத்தில் பாடப்படும் ராகம். அதனால்தானோ என்னவோ பிள்ளையாரை போற்றும் பாடல்கள் பெரும்பாலானவை இந்த ராகத்தில் அமைந்துள்ளன.

கர்நாடக இசையில், முத்துஸ்வாமி தீக்ஷிதர் இயற்றிய வாதாபி கணபதிம், கம் கணபதே, ஸ்வாதி திருநாள் எழுதிய பாஹி ஸ்ரீபதே , தியாகராஜரின் படைப்பான ரகுநாயக, ஸ்ரீ ரகுகுல போன்ற கிருதிகள் பரவலாக பாடப்பட்டு வருபவை. பாபநாசம் சிவன் அவர்கள் இயற்றிய மூலாதார மூர்த்தி, கருணை செய்வாய், புரந்தர தாசரின் கஜவதனா பேடுவே, பாலமுரளி கிருஷ்ணா அவர்களின் பிறை அணியும் பெருமான் போன்ற பாடல்களும் இந்த பட்டியலில் உண்டு. கோடீஸ்வர ஐயர் இயற்றிய கந்த கானாமுதம் என்ற கவிதை தொகுப்புக்கு முன்னுரையாக அவர் வாரணமுகவா என்ற பாடலை இந்த ராகத்தில் அமைத்தார்.


திரைப்படங்களில், இந்த ராகத்தில் அமைந்த பாடல்களின் ஒரு சில:

| திரைப்படம் | பாடல் | இசையமைப்பாளர் |
|---|---|---|
| அடுத்த வீட்டுப் பெண் | வனிதா மணியே | ஆதி நாராயண ராவ் |
| சாவித்ரி | மழை காலமும் | எம். எஸ். விஸ்வநாதன் |
| வேலைக்காரன் | வா வா வா கண்ணா | இளையராஜா |
| கிழக்கே போகும் ரயில் | மலர்களே நாதஸ்வரங்கள் | இளையராஜா |
| கடவுள் அமைத்த மேடை | மயிலே மயிலே | இளையராஜா |
| நல்லதொரு குடும்பம் | செவ்வானமே பொன்மேகமே | இளையராஜா |
| எனக்குள் ஒருவன் | தேர் கொண்டு சென்றவன் | இளையராஜா |
| சிங்காரவேலன் | இன்னும் என்னை என்ன செய்ய | இளையராஜா |
| கன்னத்தில் முத்தமிட்டால் | வெள்ளை பூக்கள் உலகம் | ஏ ஆர் ரஹ்மான் |
| ஜீன்ஸ் | பூவுக்குள் ஒளிந்திருக்கும் | ஏ ஆர் ரஹ்மான் |
| பார்த்தாலே பரவசம் | மன்மத மாசம் | ஏ ஆர் ரஹ்மான் |
| பம்மல் கே சம்மந்தம் | கடோத் கஜா | தேவா |
| அமர்க்களம் | உன்னோடு வாழாத | பரத்வாஜ் |
| சுக்ரன் | சப்போஸ் உன்னை | விஜய் அந்தோணி |

**தொகுப்பு : நாராயணன் சுப்ரமணியன**

# ஜேம்ஸ் நதிக்கரையினிலே... (ஒரு தொடர்)

இந்த முறை ஜேம்ஸ் நதிப் பயணத்தில் சற்றே விலகி கொஞ்சம் என் சொந்தப் புராணத்தை சொல்லப் போகிறேன். சில நாட்களாக மனதில் ஒரு கேள்வி ஓடிக்கொண்டிருந்தது. ஜேம்ஸ் நதிக்கும் எனக்கும் அப்படி என்ன ஒரு பிணைப்பு?



அதற்கான விடை சற்று வலியுடன் கூட்டி இந்த மாதம் கிடைத்தது. ஜேம்ஸ் நதியின் பல இடங்களை எங்களுக்கு காட்டிய எங்கள் அன்பு ஜேக்கி (Jackie) ஜகதாம்பாள் எங்களுக்கு டாட்டா காட்டிவிட்டு இறைவனடி சேர்ந்தாள்.

நதி, குளம், குட்டை எங்கும் தண்ணீரில் இறங்கி கும்மாளம் போட தயாராக இருந்தவள் ஜேக்கி. ஊரில் இருக்கும் குளங்கள், ஆற்றங்கரைகளில் எப்போதும் கூட்டம் இருக்கும். நாய்களை தங்களுடந்தான் வைத்திருக்க வேண்டும். நீரில் இறங்க அனுமதியும் கிடையாது. அப்படியும் விடாமல், நாங்கள் "சற்றும் எதிர்பாராவிதமாக" டீப் ரன் பூங்காவின் குளத்திலும், பெல் தீவிலும், இன்ஸ்ப்ரூக்கின் பின்னே இருக்கும் ரூட்டி ஏரியிலும் குதித்திருக்கிறாள். இவள் நீரில் அடிக்கும் லூட்டிக்கு தோதாக இருக்க ஊருக்கு ஒதுக்குப்புறமாக தேடிக் கண்டுபிடித்த இடம் மெய்டன்ஸ் லேண்டிங்(Maidens Boat Landing).

இந்த இடத்தில் மக்கள் தங்கள் சிறு படகுகளை ஆற்றில் இறக்கி ஏற்ற ஒரு படித்துறை போன்ற சறுகலான பாதை ஆற்றுக்குள் இறங்கும். படகுகள்

கொண்டு வருபவர்கள் தவிர வேறு நடமாட்டம் இருக்காது. இந்த இடத்தில் சாதாரணமாக ஆற்றின் ஆழம் இடுப்பளவுதான் இருக்கும். இறங்கி ஆற்றின் குறுக்காக நடந்தே கடக்கலாம். ஆற்றின் நடுவே இரண்டு குட்டித் தீவுகள் கூட உண்டு. ஆற்றில் இறங்கி நடந்தே அந்தத் தீவுகளுக்குப் போகலாம். இங்கே கோடையின் பல மாலைகள் இங்கு நண்பர்களுடனும், அவர்களின் செல்லக் குட்டிகளுடன் கும்மாளம் போட்டிருக்கிறோம். அதுவும் ஜேக்கியும் அவள் நண்பன் பிரின்ஸும் இங்கு அடித்த லூட்டிகள் சொல்லி மாளாது...

பிரின்ஸ் நீரில் இறங்க மாட்டான். கரையிலேயே ஓடிக்கொண்டிருப்பான். கொஞ்சம் கொஞ்சமாக தைரியம் வந்து அவனும் சற்று நீரில் இறங்க ஆரம்பித்தான். ஜேக்கி இயற்கையாகவே நீந்துபவள். வீட்டுத் தோட்டத்தில் வீசப்படும் பந்தை கொண்டு வந்து கொடுக்கும் விளையாட்டை சதா விளையாடிக் கொண்டிருந்தவள். அதையே ஆற்றில் விளையாடுவாள். நாங்கள் நீரில் ஒரு பந்தை விட்டெறிவோம். ஆற்றில் நீர் போகும் திசைக்கு ஏற்ப சரியாக கணக்கிட்டு நேராக நீந்திப் போய் பந்தைப் பிடித்துக் கொண்டு வருவாள். பந்தை எறியும்போது கவனிக்காமல் பராக்கு பார்த்துக் கொண்டிருந்து விட்டு தொலைத்த பந்துகள் ஏராளம். இதற்காகவே எங்கள் காரில் சில டென்னிஸ் பந்துகளை போட்டு வைத்திருப்போம். பந்து இல்லாவிட்டால் ஒரு சிறு கட்டையோ, குச்சியோ எதுவானாலும் சரி விளையாடப் போதும். களைத்துப் போய் ஆற்றோடு போய்விடுவாளோ என்ற பயம் எப்போதும் இருக்கும். பிள்ளைகள் தயாராக சற்று ஆற்றில் இறங்கி நிற்பார்கள். களைத்தாலும் சற்று நேரம் கரையில் நடந்துவிட்டு மீண்டும் ஆரம்பித்து விடுவாள்.



# ஜேம்ஸ் நதிக்கரையினிலே... (ஒரு தொடர்)

பிறகு மற்ற நண்பர்களுக்கும் சொல்லி அனைவரும் அங்கே கூடி பிக்னிக் செய்வோம். ஜேக்கி ஆற்றில் இறங்கி விளையாடி அனைவரின் நடுவே வந்து நின்று உடலை குலுக்கி அனைவரின் மேலும் நீரைத் தெளிப்பாள். அனைவரும் செல்லமாகத் திட்டுவார்கள். எவ்வளவு இடம் இருந்தாலும் எங்கள் அருகில் வந்து உடலை சிலிர்த்து எங்கள் மேல் நீரைத் தெளிப்பதில் அவளுக்கு அலாதி பிரியம்.



இங்கே ஜேக்கி அடித்த லூட்டி தாங்காது ஒரு முறை வனக்காவல் அதிகாரி ஒருவர் இது படகுகளுக்கான இடம், நீங்கள் இங்கே பிக்னிக் எல்லாம் செய்யக்கூடாது. வேண்டுமானால் ஆற்றின் வடக்குக் கரையில் ஒரு பூங்கா இருக்கிறது அங்கே இந்தக் கூத்தை எல்லாம் வைத்துக் கொள்ளுங்கள் என்று எச்சரித்துவிட்டு போனார். அவருக்கும் ஜேக்கியை விரட்ட மனம் வரவில்லை. இன்று இங்கேயே இருந்துவிட்டு போங்கள், உடனே போகத் தேவையில்லை என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். பிறகு அக்கரையில் இருக்கும் டக்கர் பூங்காவிற்கு (Tucker Park) ஓரிரு முறை சென்றோம். அந்த பூங்காவில் ஒரு சில பிக்னிக் பெஞ்சுகள் போட்டு ஆற்றங்கரை ஒட்டி ஒரு நடைபாதையும் இருந்தது. நாய்கள் ஓடி விளையாடவும் பெரிய மைதானம் அளவுக்கு இடம் இருந்தது. மீன் பிடிக்கவும் ஏற்ற இடம். ஆனால் எங்களுக்கு அந்த இடம் அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

ஜேக்கியை கடைசியாக அங்கே ஒரு முறை அழைத்துச் செல்ல விரும்பினேன். உடல்நலம் குன்றி நடக்கவே கஷ்டப்படும் ஜேக்கி அந்த இடத்தைப் பார்த்தால் வேதனைப்படுவாள் என்று என் மகன் வேண்டாம் என்று சொல்லிவிட்டான்.

ஜேக்கி எங்கோ தண்ணீரில் குதித்து கும்மாளம் போட்டுக் கொண்டுதான் இருப்பாள்.

**எழுதியவர்: நாகு பரசு**

# பள்ளிபாளையத்துக் கோழி




எங்கள் ஊர்களில் ஒன்று பள்ளிபாளையம் - அதாவது, அத்தை, மாமன், அவர்தம் மகன்/மகள்கள், மேலும் சில பல உறவுகள், நெருங்கிய நண்பர்கள் உள்ள ஊர். வண்ண மயமான மக்கள் - Literally. துணிகளுக்கு சாயம் பிடித்து அனுப்புதல் தலையாய தொழில்களில் ஒன்று. ஊரின் சாயப் பட்டறைகள் மூலம் துணிகளுக்கு மட்டுமல்ல, காவிரி ஆற்றுக்கே சாயம் ஏற்ற முயலும் வல்லவர்கள் நாங்கள்.

இந்நகரமும் பெரியார் பிறந்த ஈரோடும் இரட்டை நகரங்கள். அவங்களுக்கு ஒரு நல்லது நடந்தா எங்களுக்கும் வேணும்னு கேட்போம், அவங்களும் எங்களின் நல்லதுகளில் மறக்காது பங்கேற்பர் (பங்கு கேட்பர்). அவ்ளோ நெருக்கம் எங்களுக்குள். துணி வணிகம் எங்களை சேர்த்து நெய்து வைத்திருக்கிறது.

இதெல்லாம் மேட்டர் இல்லை. நாங்க என்னென்னவோ செய்தாலும் எங்க ஊர் பெயரை ஓகோவென பல இடங்களில் கொண்டு சேர்த்துக்கொண்டிருப்பது ஒரு கோழி வறுவல்.

**மிக எளிய செய்முறை:**

மசால் எனும் வன்முறை கிடையாது; அரை மணி நேரம் போதும்; 5-6 சமையல் பொருட்கள் போதும்; அடேங்கப்பா சுவை. வேறென்ன வேணும் ஒரு Blockbusterக்கு?
அரிசிச் சோறு, சப்பாத்தி என எதனுடனும் இணை சேரும் தன்மை இதன் கூடுதல் +.

எலும்பும் தோலும் நீக்கிய கொழுத்த கோழித்துண்டுகள் மேல் உப்பு, மஞ்சள் மிளகாய் தூள் சேர்த்து பிசறி வைத்துவிடுங்கள்.
வெங்காயத்தோடு, 4-5 பூண்டு பற்கள் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

# சமையல் குறிப்பு

அடி கனமான வாணலியில், தேங்காய் எண்ணெயில் கடுகை பொரித்து, சோம்பு சேர்த்து அதுவும் பொரிந்தவுடன் வெங்காய -பூண்டு கூட்டணியை சேர்த்து கொஞ்சமே கொஞ்சம் நேரம் வதக்கவும். பின், சிறு துண்டுகளாக வெட்டிய தேங்காய் பத்தைகளை சேர்த்திடுங்கள். காய்ந்த மிளகாய் அடுத்தது.

என்னைப் போன்ற 'பிரட்டல் - விரும்பிகள்' சிறிது துருவிய தேங்காயை சேர்க்கலாம்.

ஊர் பெயரைக் காப்பாற்ற வந்திருக்கும் கோழியை அடுத்ததாக சேர்த்து, மிதமான சூட்டில் பிரட்டி பிரட்டி வேகவிடவும். முக்கால் பங்கு வெந்தவுடன் ஒரு கிண்ணம் தண்ணீர் சேர்த்து மூடி வைத்திடுங்கள். 10 மணித்துளிகளில் மணக்க மணக்க தயாராகிவிடுகிறது அந்த புகழ்பெற்ற பள்ளிபாளையத்துக் கோழி.

சீரக சம்பா அரிசியிலோ பாசுமதி அரிசியிலோ பொங்கிய சோறு இரண்டு கரண்டிகள், இந்தக் கோழி வறுவல்/பிரட்டல் ஒரு கரண்டி என ஒரு தட்டில் எடுத்துக்கொண்டு நாவின் எல்லா சுவை அரும்புகளிலும் படும்படி மெதுமெதுவாக சுவைத்துப் பாருங்கள்; உலக வாழ்வின் உன்னதங்களில் ஒன்றை கைக்கொண்டிருப்பீர்.

**குறிப்பு:**

மறந்தும் மசால் சேர்த்து விடாதீர். அழகிய வேலைப்பாடுகளோடு சித்தன்னவாசல் போல் ஓவியம் வரைந்து அதன் மீது சுண்ணாம்பு அடித்ததது போல் ஆகிவிடும்.

நான் செய்த சமையலை படம் எடுப்பதற்குள் அதன் மணம் மற்றும் சுவையின் காரணமாக தீர்ந்து போய்விட்டது என்றால் யாரேனும் நம்பவா போகிறார்கள்? அதனால் ஏதும் காரணங்கள் சொல்லாமல் விக்கிமீடியாவின் உதவியோடு எடுத்த காப்புரிமைச் சிக்கல் இல்லாத கோழி வறுவலின் படங்கள் இவை. :)

**எழுதியவர்: உள்ளூர்க்காரன்**

## காலம்

உன்னை கண்ணால் காண முடியாது
உன்னை கையால் தொட முடியாது
உனக்கு அடங்காதோர் கிடையாது
உன்னை அடக்கியவரும் கிடையாது

உன்னை கடந்து செல்ல முடியாது
உன்னை வழி நடத்தவும் முடியாது
உன்னை நிறுத்தவும் முடியாது
உன்னை வெல்லவும் முடியாது

உன்னை விட்டு விலகவும் முடியாது
உன்னை நெருக்கவும் முடியாது
உன்னை அழிக்கவும் முடியாது
உன்னை ஆக்கவும் முடியாது

உனக்கு குரோதமும் கிடையாது
உனக்கு பேதமும் கிடையாது
உனக்கு பாதகமும் கிடையாது
உனக்கு சாதகமும் கிடையாது

உனக்கு லோபமும் கிடையாது
உனக்கு தாபமும் கிடையாது
உனக்கு மதமும் கிடையாது
உனக்கு மாச்சரியமும் கிடையாது

உன் பிறப்பும் தெரியாது
உன் முடிவும் தெரியாது
உன் வேகம் சீரானது
உன் ஆளுமை மாறாதது

நீயின்றி ஒரு அண்டமும் அமையாது
நீயின்றி ஒரு அணுவும் அசையாது

காலமே இவை அனைத்தும் நீயானால்
நீதான் இறைவனோ எவருக்கும் தெரியாது

**எழுதியவர் - வெண்பா**

## எங்க வீட்டு பாப்பா

எங்க வீட்டு பாப்பா
மிகவும் சுட்டி பாப்பா

தத்தி தத்தி நடப்பாள்
கண் சிமிட்டி சிரிப்பாள்
திக்கி திக்கி பேசுவாள்
தின்பண்டம் கேட்பாள்

எங்க வீட்டு பாப்பா
மிகவும் சுட்டி பாப்பா

அண்ணனை மிரட்டுவாள்
அம்மாவிடம் கொஞ்சுவாள்
அப்பாவை அழைப்பாள்
கதை சொல்ல கேட்பாள்

எங்க வீட்டு பாப்பா
மிகவும் சுட்டி பாப்பா

தாத்தாவுடன் செல்லுவாள்
பூங்காவில் ஊஞ்சல் ஆடுவாள்
பாட்டியுடன் தூங்குவாள்
ஆனாலும் சண்டை போடுவாள்

எங்க வீட்டு பாப்பா
மிகவும் சுட்டி பாப்பா

**எழுதியவர் - வெண்பா**

## பெண்..

கடவுள் படைத்த மண்.. இல்லை
“வைரப்பாறை”

மின், மென், மான்,
மிளிர், எளிர், மலர்.. இவை
சிலரின் மேலோட்ட பார்வை!
இவை இன்றில் செல்லாத உவமை..
ஆழத்தில் அவள் ஒரு வைரப்பாறை!

பாறையின்றி மண்ணின்றி நிலமின்றி
மரமின்றி வளமின்றி வாடிவிடும் உலகம்!
பெண்ணின்றி ஆணின்றி மனிதமின்றி
ஆற்றலின்றி படைப்பின்றி முடங்கிடும்
உலகம்!!

நான்கில் ஒன்றான நிலம் நிற்பதுன்
பாறையில்,
நான்கில் மூன்றான நீர் நிற்பதும் பாறையில்,
இரு நால் அற்புதம் (எண்ணூறு கோடி)
மனிதரின்
முதல் அணுவை
சுமந்ததே உன் கருவறையில்!

ஆதலால் என் பார்வையில்..
பெண் ஒரு வைர பாறை!

**எழுதியவர் - சுரேஷ் கண்ணா**

## நட்பின் நிறங்கள்

காலத்தை உணர்த்துவதால்
அவன் எனக்குத் தாத்தாவும் இல்லை
கண்மூடித்தனமான நம்பிக்கை
வைத்திருப்பதால்
அவன் எனக்குப் பாட்டியும் இல்லை
அறிவை முழுமையாக வழங்குவதால்
அவன் எனக்குத் தந்தையும் இல்லை
பாசத்தைக் கொட்டி அளிப்பதால்
அவன் எனக்குத் தாயும் இல்லை
முயற்சிக்குக் கைகொடுப்பதால்
அவன் எனக்குப் பெரியப்பாவும் இல்லை
நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக்
கொடுப்பதால்
அவன் எனக்குப் பெரியம்மாவும் இல்லை
எனது பிறந்தநாளைக்
கொண்டாடுவதால்
அவன் எனக்குச் சித்தியும் இல்லை
அறிவுரைகளைக் கூறுவதால்
அவன் எனக்கு சித்தப்பாவும் இல்லை
எங்குச் சென்றாலும் பாதுகாப்பதால்
அவன் எனக்கு அண்ணனும் இல்லை
வேலைகளைப் பகிர்வதால்
அவன் எனக்கு அக்காவும் இல்லை
அவ்வப்போது செல்லச் சண்டை
போடுவதால்
அவன் எனக்குத் தங்கையும் இல்லை
சபையில் மரியாதை படுத்துவதால்

அவன் எனக்குத் தம்பியும் இல்லை
மாப்பிள்ளை என்று அழைப்பதால்
அவன் எனக்கு மாமனும் இல்லை
நன்கு உபசரிப்பதால்
அவன் எனக்கு அத்தையும் இல்லை
என்னுடைய செயல்களை நேசிப்பதால்
அவன் எனக்கு முறைப்பையனும்
இல்லை
இலவசமாகப் பணம் வழங்குவதால்
அவன் எனக்கு முறைப்பெண்ணும்
இல்லை
பிரச்சனையில் முன் நிற்பதால்
அவன் எனக்குப் பங்காளியும் இல்லை
இவை அனைத்தும் ஆய் வாழ்வதால்
அவன் எனக்கு உயிர்த் தோழன்!

**எழுதியவர் - ஹர்ஷினி ஶ்ரீனிவாசன்**

# திரைப்பட விமர்சனம்

## கர்ணன்




'என்ன இந்திரா காந்தியைச் சுட்டுட்டாங்களா?' என்று நீங்கள் கிண்டலடிப்பது கேட்கிறது. ஓடிடியில் (Amazon Prime) வந்தே கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஆகி விட்ட நிலையில் கிண்டல் நியாயம்தான்.
நான்கு பார்வையற்றோர் யானையைத் தடவிப் பார்த்து ஒவ்வொரு விதமாய் வர்ணித்த மாதிரி இந்தப் படம் வெளிவந்தவுடன் அவரவர்க்குத் தோன்றியபடி பலதரப்பட்ட விமர்சனங்கள், சர்ச்சைகள். எனவே நானும் என் பங்குக்கு இந்த விமர்சனத்தைப் போட்டு ஜோதியில் ஐக்கியமாகிறேன்.

இயக்குநர் மாரி செல்வராஜின் இரண்டாவது படம். பலதரப்பினரால் சிலாகிக்கப்பட்ட முதற்படமான 'பரியேறும் பெருமாள்' தந்த வெளிச்சத்தால் அடுத்த படத்தில் பெரிய நடிகரை இயக்கும்  நிலைக்கு உயர்ந்தவர்.

கதை நடக்கும் காலக்கட்டத்தைக் குறித்த சர்ச்சை - நான் பார்க்கும் போது '1997க்கு முன்' என்று வந்தது. படம் தியேட்டரில் வெளியான போது '90களின் பிற்பகுதி' என்று இருந்தது. அதன்பின் வந்த அழுத்தங்களால் மாற்றப்பட்டது. 1995ல் போலீஸ் அடக்குமுறைக்கு உள்ளான கொடியங்குளம் (படத்தில் பொடியங்குளம்) கிராமம் கதைக்களமாக இருப்பதால் '90களின் பிற்பகுதி' என்பது அப்போது ஆட்சி மாற்றம் நடந்து அதிகாரத்தில் இருந்த வேறு கட்சியைக் குறிக்கிறது மற்றும் 90களில் இறுதியில் நடந்த தாமிரபரணி துப்பாக்கிச்சூடு (மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம்) பற்றியது எனவும் சர்ச்சை வெடித்தது. ஆனால் எனக்குத் தோன்றியவரை இயக்குநர் இந்தப் படத்தை ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றியதாக இல்லாமல் தாழ்த்தப்பட்டவர்கள் மேல் அரசு இயந்திரம் நடத்திய வன்முறைகளின் தொகுப்பாகவே எடுத்திருக்கிறார்.

கதைப்படி பொடியங்குள கிராம மக்கள் தங்களின் அத்தியாவசியத் தேவையான பேருந்து நிறுத்தத்திற்குக் கூட போராட வேண்டியிருக்கிறது. ஆனால் 1995 கலவரத்திற்கு முன்பே



கொடியங்குள கிராம மக்கள் சிங்கப்பூர், வளைகுடா நாடுகள், மற்றும் பிற மாநிலங்களில் வேலை பெற்று ஓரளவு பொருளாதார தற்சார்பைப் பெற்றிருந்தனர். கலவரத்தின் போது உடைத்து நொறுக்கப்பட்ட குளிர்ப்பதனப் பெட்டிகள், தொலைக்காட்சி (இலவசத் தொலைக்காட்சிக்கு முந்தைய காலகட்டம்) இவைகளே சாட்சி. அவர்கள் கோரியதெல்லாம் சமுதாயத்தில் தங்களுக்கான இடம், அங்கீகாரம் மட்டுமே.

ஆனால் படத்தில் வரும் கிராம மக்கள் தங்கள் அடிப்படை உரிமைகளுக்கே போராட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். மேலும் பேருந்து நிறுத்தத்தில் ஒட்டப்பட்டிருக்கும் 'பாரதி கண்ணம்மா ' சுவரொட்டி (97ல் வந்த படம்) போன்ற குறிப்புகள் இயக்குநர் ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை மையப்படுத்தாமல் அரசு தாழ்த்தப்பட்டவர்கள் மீது அரசாங்க இயந்திரம் ஆதிக்க சாதியினரின் மூலமாக நடத்திய வன்முறைகளின் மீதான பொதுவான விமர்சனமாகவே கொள்ள வேண்டும்.

கவனிப்பாரின்றி சாலை நடுவில் வலிப்பு வந்து இறந்து போகும் சிறுமியுடன் படம் தொடங்குகிறது. கிராமத்தார் அந்தச் சிறுமி தெய்வமாகி அக்கிராமத்தில் வளைய வருவதாக நம்புகிறார்கள். இது போன்ற அகால மரணமடைந்த சிறுமிகள் கன்னித்தெய்வங்களாக உருவாகிய கதை எல்லா கிராமங்களிலும் கேள்விப்படக் கூடிய ஒன்று.

படம் முழுக்க குறியீடுகளால் நிரம்பியிருக்கிறது. தலையில்லா புத்தர் சிலை, முன்னங்கால்கள் கட்டப்பட்ட கழுதை என்று. மற்றும் மண்புழு, மரவட்டை முதல் யானை வரை காட்சிப்படுத்தப்பட்ட உயிரினங்கள்.

கர்ணனாக தனுஷ் - கோபக்கார இளைஞனாக ஆங்காரம், ஆவேசம் என்று உணர்ச்சிகளை நன்கு வெளிப்படுத்தியிருக்கிறார். ஏமராஜா (மலையாள நடிகர் லால்), கர்ணனின் சகோதரி பத்மினி (லக்ஷ்மி பிரியா) ஆகியோர் கனகச்சிதம்.

# திரைப்பட விமர்சனம்

போலீஸ் அதிகாரி கண்ணபிரான் (நட்டி) பாத்திரம் ஒற்றைப் பரிமாணமாய் இருந்தாலும் அந்த அதிகாரத் திமிரை நன்கு ளிப்படுத்தி உள்ளார். அறிமுகக் கதாநாயகி திரவுபதி (ரஜிஷா விஜயன்) தவிர மற்ற நடிகர் தேர்வு சிறப்பு. அவர் நடிப்பில் குறையில்லை என்றாலும் அந்தச் சூழலுக்குப் பொருந்தாமல் ஏதோ கிராமத்தை சுற்றிப் பார்க்க வந்தவர் போல் இருக்கிறார். கதாபாத்திரங்களின் பெயர்களைப் பார்த்தே இது கௌரவர் பார்வையில் சொல்லப்பட்ட மகாபாரதமாக எடுத்துக் கொள்ளலாம்.

தேனி ஈஸ்வரின் ஒளிப்பதிவும், சந்தோஷ் நாராயணனின் இசையும் படத்திற்கு சரியான பக்க பலங்கள். 'கண்டா வரச் சொல்லுங்க' பட்டி தொட்டியெல்லாம் ஹிட்டடித்த நிலையில் ச.நா. பிண்ணனி இசையில் அசத்துகிறார்.

எல்லாம் இருந்தும் படம் நிறைவை அளிக்கவில்லை. தனுஷின் நட்சத்திர அந்தஸ்தை மனதில் கொண்டு வைக்கப்பட்ட காட்சிகளால் இருக்கலாம். தனுஷ் மாதிரி பெரிய நடிகரை வைத்துக் கொண்டு 'பரியேறும் பெருமாள்' மாதிரி எடுக்க முடியாது என்பது நியாயம்தான். இருந்தாலும்..

மொத்தத்தில் உரலில் குத்தி, அம்மியில் நசுக்கி, மிக்ஸியில் அரைத்தபின் குக்கரில் வேக வைத்த பதார்த்தத்தைச் சாப்பிட்ட உணர்வு.

**எழுதியவர்: ரவி திருவேங்கடத்தான்**

# வணிக ஆதரவாளர்களுக்கு நன்றி!



# தமிழ்ப்பள்ளி மாணவர்கள் (ராமுவும் சோமுவும்)




**வகுப்பு: நிலை 7 மாணவிகள்**
**தலைப்பு: எங்களின் கதைகள்**
**ஆசிரியை: லதா தியாகராஜன்**

## ராமுவும் சோமுவும்

ஒரு நாள், இரண்டு காளைகள் ஒரு மலை மேல்  நடந்தன. ஒரு காளை பெரிதாக இருந்தது. ஒரு காளை சிறியதாக  இருந்தது. பெரிய காளையின் பெயர் ராமு. சின்ன காளையின் பெயர் சோமு. ராமு மாடுகளின் கூட்டத்தின் தலைவராக இருந்தார். ராமுவுக்கு ஒரு மோசமான பெயர் இருந்தது. அவர் ஒரு சர்வாதிகாரி மாதிரி நடந்து கொள்வார். எல்லா மாடுகளுக்கும் ராமுவை சுத்தமாக பிடிக்கவில்லை. மாடுகள் பலவீனமாக இருந்ததால், அவர்களால் ராமு கூட சண்டை போட முடியவில்லை. ராமுவும் சோமுவும் காட்டில் உணவு தேடினார்கள்.  சோமு ஒரு பழங்கள் நிறைந்த புதரை கண்டுபிடித்தார். அந்த புதரில் பல வண்ணங்களில் பழுத்த பழங்கள் இருந்தன. அவர் உடனே சொன்னார், "இந்த புதரில் எல்லா பழங்களும் சுவையாக இருக்கிறது. எல்லா மாடுகளோடும் பழங்களை பங்கிடுவோம். ஆனால், ராமு இந்த புதரை எந்த வகையிலும் பார்க்கக்கூடாது. அவர் புதரை பார்த்தால், எல்லா பழங்களையும் அவரே எடுத்துக்கொள்ள முயற்சிப்பார்.

உடனே, ராமு வந்தார். அவர் பழங்களை கண்டவுடன் சோமுவை கோபப்பார்வை பார்த்தார்.

ராமு கோபமோடு கூறினார், "நீ ஏன் இந்த பழங்களை என்கிட்டே மறைத்தாய்? இந்த காட்டிலிருந்து உடனே போ! இதுதான் உன் தண்டனை!”

“நான் எல்லா மாடுகளுக்கும் உதவி தான்  செய்தேன். இப்போ, நீ  கோபப்படுகிறாய்”, சோமு பெருமூச்செறிந்தார்.

# தமிழ்ப்பள்ளி மாணவர்கள் (ராமுவும் சோமுவும்)

"என்ன தைரியம் இருந்தால் என்கிட்டே இப்படி பேசுவாய்!" என்று ராமு கத்தினார்.

ராமுவின் கூர்மையான கொம்புகள் வெளிச்சத்தில் மின்னியது. அவரின் குளம்புகள் கொண்டு தரையில் வலிமையோடு சத்தம் உண்டாக்கினார். அவர் சண்டை போடத் தயாரானார். ஆனால், சோமுவிடம் ஒரு திட்டம் இருந்தது. அவர் ராமுவின் வலிமை தெரிந்தவர். அவர் ராமுவை கோபப்படுத்துவதற்குத்தான் தான் இப்படி பேசினார்.

உடனே, ராமு வேகமாக சோமுவின் அருகில் ஓடினார். சோமு ஒரு பழைய ஆலமரம் முன்னால் நின்றார். அந்த நேரத்தில், நிசப்தமாக இருந்தது. ராமு சோமுவை முட்டும் நேரம் வரும்போது, சோமு வேகமாக ஒரு பக்கத்தில் குதித்தார்.

ராமு அந்த மரத்திற்குள் ஓட வேண்டும் என்று சோமு விரும்பினார். "அதுதான் ராமுவுக்கு ஒரு நல்ல பாடம் தரும்," என்று சோமு நினைத்தார். ஆனால், ராமு மரத்தை தவிர்த்தார். அவர் நேராக ஓடினார். அவருக்கு அதிகமான பலம் இருந்ததால் அவரால் நிற்கமுடியவில்லை. நேராக ஓடிய ராமு ஒரு பெரிய கிணற்றில் விழுந்தார்.

“அய்யோ! யாராவது என்னை காப்பாற்றுங்கள்!”, என்று அழுதார்.

சோமு அதிர்ச்சியுடன் பார்த்தார். இப்படி நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. உடனே, சோமு கத்தினார், "எல்லோரும் இங்கே வாருங்கள்! ராமுவை காப்பாற்ற வேண்டும்!"

ராமு மூழ்கிப் போகும் போது எல்லாம் காட்டு விலங்குகளும் உதவினார்கள். பறவைகளும், யானைகளும், நாய்களும், எல்லா மாடுகளும் ராமுவை தண்ணீரில் இருந்து எடுக்க உதவி செய்தார்கள்.

ராமு நன்றியோடு அனைவரையும் தலை குனிந்து வணங்கினார். சோமுவிடம் நன்றிசொன்னார். இறுதியாக, அவர் எல்லோருக்கும் மரியாதை மற்றும் மதிப்பு கொடுக்க வேண்டும் என்று புரிந்துகொண்டார். ராமுவும், சோமுவும், எல்லா மாடுகளும் இன்பமாக வாழ்ந்தார்கள்.

**எழுதியவர்: மாணவி வைதேஹி மூர்த்தி**



# புலியும் எலியும்

ஒரு காட்டில் பலகாலமாக பல விலங்குகள் வாழ்ந்து வந்தன அதில் ஒரு புலி பலமாக இருந்தது அதனால் அனைவரையும் பயமுறுத்தி வந்தது பிற விலங்குகளை அச்சுறுத்தி வாழ்ந்து வந்தது இதற்கிடையில் ஒரு சிறிய எலியும் அந்தக்காட்டில் வாழ்ந்தது எலி எல்லா விலங்குகளுடனும்நட்புடன் இருந்ததால் அனைத்து விலங்குகளும் அதனை விரும்பின ஒரு நாள் வனத்தின் ராஜாவாகஇருந்த சிங்கம் எல்லா விலங்குகளிடமும் தனக்கு வயதாகிவிட்டதால் தான் ஓய்வுபெறப்போவதாகவும் அதனால் ஒரு புதிய ராஜாவைத் தேர்வு செய்யப் போவதாகவும் கூறியது அந்தத்தேர்வில் யார் வேண்டுமானாலும் போட்டியிட முன் வரலாம் என்றது புலி முன்வந்து நான் புதிய ராஜாவாக மாறுவேன் என்னை தோற்கடிக்க யாரும் வலிமையானவர்கள் அல்ல என்றது எலி கோபமடைந்து புலிக்குஎதிராகப் போட்டியிட்டு மற்ற எல்லா விலங்குகளையும் அதன் கோபத்திலிருந்து காப்பாற்ற முடிவு செய்தது நான் புலிக்கு எதிராக நிற்பேன் என்று சிறிய எலி கூறியது



# புலியும் எலியும்



காட்டு விலங்குகள் எல்லாம் அதிர்ச்சிஅடைந்தன புலி கோபத்தில் சிரித்தது. எனக்கு எதிராக ஒரு சிறிய எலியா? யார் வெல்கிறார்கள் எனப் பாரக்கலாம் என்றது சிங்கம். சரி. நாளை சிறிய எலிக்கும் பெரிய புலிக்கும் இடையே ஒரு போட்டி நடத்துவோம் என்றது. அடுத்த நாள். அனைத்து விலங்குகளும் போட்டி தொடங்குவதற்காகக் காத்திருந்தன. அப்போதுசிங்கம். புலியும் எலியும் காட்டைச் சுற்றி வரவேண்டும். முதலில் வருபவரே வெற்றி பெற்றவராவார். அவரே இந்தக்காட்டின் புதிய அரசனாவார் என்றது. போட்டி துவங்கியதும். புலி பாய்நது ஓடியது எலியோ மெதுவாகத்தான் செல்ல முடிந்தது. இதனைக்கண்ட யானை எலிக்கு உதவி செய்ய முன்வந்தது. எலியும் ஒப்புக்கொண்டது. யானை எலியை முதுகில் ஏற்றிக்கொண்டு விரைந்தோடியது. சிறிது நேரம் கழித்து. யானை மிகவும் சோர்வடைந்தது. யானையின் பின்புறத்திலிருந்து எலி இறங்கும்போது ஆந்தை அவர்களைஅணுகியது. 'ஹாய் மவுஸ்' நீங்கள் புலிக்கு எதிராகப் போட்டியிடுகிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். உங்களுக்கு நான் உதவலாமா? என்று கேட்டது. எலியும் தயக்கத்துடன் ஏற்றுக்கொண்டது. யானைக்கு நன்றி கூறிவிட்டு ஆந்தையுன் முதுகில்அமர்ந்து பறந்தது.





# புலியும் எலியும்





காட்டு நதியருகில் வரும் வரை எலி ஆந்தையின் மீது பறந்தது. ஆனால்ஆந்தையைம் சோர்வடைந்து விட்டது. இப்பொழுது அங்கு கரடி எலி ஆற்றைக் கடக்க உதவமுன்வந்தது. அதன்பிறகு எல்லைக்கு இன்னும் சிறிது தூரம் மட்டுமே இருந்தது. எனவே எலி தனதுமுழு வலிமையுடன் சொந்தமாக ஓடியது. இதற்கிடையில், புலி நதிக்கரைக்கு வந்து சேர்ந்தது. புலி நதியைக்கடக்க உதவி கேட்டபோது, விலங்குகள் எதுவும் உதவவில்லை. அதனால் புலி மிகவும்சோர்வாக இருந்தது. எலி மிகவும் பின்னால் இருப்பதாக நினைத்து புலி தானே மெதுவாக ஆற்றைக்கடந்தது. எல்லைக்கோட்டை நெருங்கும் போதுதான் எலி தனக்கு முன்னரே அங்கே வந்தைசேர்ந்ததைக் கண்டது. எலி எவ்வாறு வென்றது என்று புலி கேட்டது. "சிறிய எலி எனக்கு முன் ஓடவழியே இல்லை" எனக்கோபத்தில் வெடித்தது புலி. "அதற்கை என் நண்பர்களின் உதவியுடன்இதைச் சாதித்தேன்" என்றது எலி. புலியால் எதுவும் சொல்ல முடியவில்லை. அப்போதிருந்து, காடு எப்போதும் ஒரு நியாயமான, அமைதியான இடமாக இருந்து வருகிறது. ஏனெனில் எலி ஒரு நல்ல, நியாயமான ராஜாவாக ஆட்சி செய்து வந்தது. அவளுடைய ராஜ்யத்தில்ஒரு மிருகத்தைத் தவிர எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். அந்த ஒரு மிருகம் - புலி. அதுஇன்னும் திருந்தாமல் அடாவடியாக நடந்து கொண்டதால், அனைவரும் முடிவு செய்து காட்டில்இருந்து விரட்டிவிடப்பட்டது.







# புலியும் எலியும்




நீதி
நீங்கள் பிறரால் எப்படி நடத்தப்பட வேண்டும் என
விரும்புகிறீர்களோ அதே விதத்தில்
பிறருடனும்நடந்து கொள்ளுங்கள் மற்றவர்களைக்
குறைத்து மதிப்பிடாதீர்கள்



எழுதியவர்: மாணவி பாரதி சரவணன்

## முதுகு வலி நமக்கு எதனால் வருகிறது?




**தொகுப்பு - ராம்கி கவசேரி**

# தாயுமானவர் (சிறுகதை)

அக்கா, எங்க அலுவலகத்தில் தந்தையர் தினம் கொண்டாட போறாங்க. "அப்படியா அருமை, என்னைக்கு celebration?” என்று அக்கா கேட்டாள். இந்த வெள்ளிக்கிழமை, முழு நாளும்."உன்னுடைய அலுவலகத்தில் எப்பவும் கொண்டாட்டம்தான்" என்று அக்கா கலாய்த்தாள்.

என்னை அந்த விழாவில் பேச சொல்லியிருக்காங்க."நம்ப வீட்டிலேயே நீதான் பெரிய வாயாடி அப்புறம் என்ன, கலக்கு" என்றாள் அக்கா. Father, தந்தை, தகப்பன் பத்தி பேசவேண்டும், ஐடியா கொடு ."இரு யோசிக்கிறன், ஹ்ம்ம், ஹ்ம்ம்... "என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

"தாயுமானவர் பத்தி பேசுறியா" என்று அக்கா வினா எழுப்பினாள். தாயுமானவரா, அவர்யாரு?"அடிப்பாவி, என்ன இப்படி கேக்குற ", சரி சொல்லுறேன்.

"ஒரு கர்ப்பிணிப் பெண்,கணவனுடன் கிராமத்தில் வாழ்ந்து வந்தாளாம். அவள் தீவிரமான சிவன் பக்கத்தை. அப்போது ஒரு சமயம், கனமா மழை பெய்ந்து பெரிய வெள்ளம் வந்த்துருச்சு. திடீருனு, அவளுக்குப் பிரசவ வலியும் வந்த்துருச்சு. அவளுடைய கணவனுக்கு என்ன பண்ணுறதுனே தெரியலை, அவனுடைய மனைவி வலியில் துடிக்கிறதைப் பார்க்கவே முடியவில்லை. அவளுடைய அம்மா பிரசவத்துக்கு வரவேண்டியது, இந்த மழையில் அவங்க வர்றதுக்குத் தாமதம் ஆயுடுச்சு. அவளுடைய கணவன், வேற யாராவது உதவிக்கு

இருப்பாங்களானு பாக்க வெளியில் போனான். ஆனால் யாருமே இல்லை. கடவுள் சிவனிடம் போய் "உன்னதான என்னுடைய மனைவி தினமும் வணங்கினாள், இப்போது அவள் பிரசவ வலியில் யாரும் இல்லாமல் துடித்து கொண்டியிருக்கிறாள்" அப்படியென்று கதறி அழுதான்." என்றாள் அக்கா.

ஒ, அந்த கணவர்தான் தாயுமானவரா அக்கா?. " இல்ல, இல்ல,என்ன கதையை முழுசா சொல்லவிடு, அவளுடைய அம்மா உடனே வீட்டுக்குள்ள நுழைந்து தன் மகளுடைய கையைப்பிடித்து ஆறுதலும் தைரியமும் சொல்லி பிரசவம் பார்த்தங்களாம். கொஞ்ச நேரத்தில் குழந்தை பிறந்தது, அவளும் மயக்கமாகிட்டாள். கணவன் வீட்டுக்கு வந்து பார்த்தால் அவள் பக்கத்தில் குழந்தை இருக்கிறது அப்புறம் மயக்கம் தெளிந்து இரண்டு பேரும் குழந்தையைக் கொஞ்சிக்கொண்டு இருந்தார்கள்.

# தாயுமானவர் (சிறுகதை)

யாரோ கதவு தட்டுகிற சத்தம் கேட்டுச்சு, போய் பார்த்தா அவளுடைய அம்மா கையில் பையோடு நிக்கிறாங்க. அம்மா உள்ள வந்து குழந்தையை பாத்துட்டு,"குழந்தை பிறந்துருச்சா, இந்த மழையில் நான்வர்றதுக்கு தாமதம் ஆயிடுச்சி".இவங்களக்கு எதுவும் புரியவில்லை, "என்னமா சொல்லுற நிதானமா என்னுடைய பக்கத்தில் இருந்து பிரசவம் பார்த்த"."நானா, நான் இப்போதுதான் வரேன்". அப்புறம்தான் அவர்களுக்கு புரிஞ்சுது அந்த சிவபெருமான்தான் இவங்க அம்மா மாதிரி வந்தார் "என்று அக்கா கதையைச் சொல்லி முடித்தாள்.

அக்கா, இது உன்னுடைய கதை மாதிரி இருக்கே."நான் பொய் சொல்லல, இது உண்மையான கதை, அதுனாலதான் தாயுமானவர் அப்படினு ஒரு சன்னதிகூட இருக்கு திருச்சி மலைக்கோட்டை கோவிலில் "என்றாள் அக்கா.

நான் அப்படிச்சொல்லலை அக்கா, உனக்குப் போன வருஷம் பிரசவம்  ஆனதுக்கு அப்புறம் நம்ப அப்பாவும் அம்மா மாதிரி இருந்து உன்ன பாத்துக்கிட்டாரு. அப்படினா நம்ப அப்பாவும் தாயுமானவர்தான்.

வெள்ளிக்கிழமை அவளுடைய அலுவலகத்தில், அவளுடைய அக்காவின் கதையைச் சொல்லிவிட்டு "எங்கள் இரண்டு  பேருக்கும் சிதம்பரம் (எ) தாயுமானவர் கிடைத்தது போல், உங்கள் எல்லோருடைய வாழ்விலும் உங்களுடைய தாயுமானவர் இருக்கிறார் என்று நம்புகிறேன். நம்முடன் வாழ்ந்துவரும் எல்லா தாயுமானவரையும் போற்றி வணங்குவோம்" என்று பேச்சை முடித்தாள்.


**எழுதியவர் - ஹர்ஷினி ஸ்ரீனிவாசன்**

## வாசகர் கருத்து

இந்த மாத கதம்பம் இதழைப் பற்றிய உங்கள் கருத்தை தெரிவிக்க விரும்பினால், இந்த படிவத்தின் மூலம் எங்களுக்கு தெரிவிக்க வேண்டுகிறோம்.

newsletter.rts@richmondtamilsangam.org எனும் மின்னஞ்சலிலும் எங்களை தொடர்பு கொள்ளலாம். நன்றி!

## முற்றும்



கதம்பம் இதழில் தங்கள் கதை, கட்டுரை, கவிதை மற்றும் பயனுள்ள பல விஷயங்களை இரிச்மண்டு சமூகத்துடன் பகிர்ந்து கொண்ட அனைத்து எழுத்தாளர்களுக்கும் தமிழ்ச் சங்க நிர்வாகக் குழுவின் மனமார்ந்த நன்றி.